விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 173 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (10.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567
(C-3171)

## மேயராக திருமதி வி.மதிவதனி துணைமேயராக இ.தயாளன்

### யாழ்.மாநகர சபைக்காக பதவிகளை பரிந்துரைத்தது தமிழரசுக் கட்சி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் பதவிக்குத் திருமதி விவேகானந்தராஜா மதிவதனியை இலங்



15ஆம் பக்கம் பார்க்க

## திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி தையிட்டியில் நேற்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு

15ஆம் பக்கம் பார்க்க



# யாழில் நடந்து கொள்வது
# வன்னியில் பதிலாக தரப்படும்

## தமிழரசுக் கட்சி ரெலோவிடம் உறுதியாகத் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ரெலோ உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எவ்வாறு நடந்து கொள்கின்றதோ வன்னி தேர்தல் மாவட்டத்தில் அதே பதில் முறைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நடந்து கொள்ளும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ரெலோ தலைவர்களிடம் நேற்று உறுதிபடத் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமியும் நேற்று பிற்பகல் யாழ்.நல்லூரில் சி.வி.கே.சிவஞானத்தின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வன்னியில் வவுனியா மாநகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் தங்கள் தரப்பு நிர்வாகத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்கும்படி ரெலோ தரப்பினர் இந்தச் சந்திப்பின்போது தமிழரசுக் கட்சியிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளின் விடயத்தில் ரெலோ கட்சியும் அது சார்ந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் எப்படி நடந்து கொள்கின்றனவோ, அதே முறைமையில் வன்னியில் பதில்

16ஆம் பக்கம் பார்க்க

## கண்டியை சேர்ந்த ஐவர்

### அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

(சென்னை)
கண்டியிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.
கண்டியைச் சேர்ந்த 43

15ஆம் பக்கம் பார்க்க

## சிஐடியில் ஆஜராகவுள்ள ரணில்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை புதன்கிழமை (11) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகவுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### - தாயகம் திரும்பும் அகதிகளுக்கான -

## வாழ்வாதார வசதிகள் குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை

### இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா

(கொழும்பு)
இந்தியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கான இருப்பிடம் மற்றும் வாழ்வாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய தன் அவசியம் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரி

15ஆம் பக்கம் பார்க்க

## பணிநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர்

### குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது

(கொழும்பு)
பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
ஜனாதிபதியின் பொதுமன்

15ஆம் பக்கம் பார்க்க

### பீடி இலைகளுடன்

## மன்னாரில் 4 பேர் கைது

(மன்னார்)
மன்னார் நடுக்குடாப் பகுதியில் வைத்து சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 1314 கிலோ கிராம் நிறையுடைய பீடி இலை

15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு காணி விவகாரம் தொடர்பான

## வர்த்தமானி இரத்தாகும் திகதி விரைவில் அறிவிக்கப்படும்

### நீதியமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)
வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி இரத்துச் செய்யப்படும் திகதி தொடர்பில் காணி அமைச்சர் லால் காந்தவுடன் கலந்துரையாடியதன் பின்னர் அறிவிப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டியில் இன்றும் நாளையும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம்

### கஜேந்திரகுமார் உட்பட 27 பேருக்கு எதிராக நீதிமன்றால் தடை

(யாழ்ப்பாணம்)
தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் இன்றும் (10) நாளையும் (11) ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என்று அறிவித்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட 27 பேருக்கு மல்லாகம் நீத

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி - அல்வாய் வடக்கு
# அருள்மிகு குருக்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தான
## இரதோற்சவ சிறப்பு மலர் - 10.06.2025



### ஆலய மஹோற்சவ பிரதம குரு ஆசியுரை

இந்து மகா சமுத்திரத்தின்முத்தாக விளங்கும் இலங்கை திருநாட்டின் வடபால் யாழ். பருத்தித்துறை அல்வாய் வடக்கில் குருக்கட்டு அரசடி என்னும் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு வைகாசி மாத பௌர்ணமியை தீர்த்தோற்சவமாகக் கொண்டு இடம்பெறும் மஹோற்சவப்பெருவிழாவில் இன்றையதினம் (10/6/2025) இடம்பெறும் தேர்த்திருவிழா சிறப்புற. இத்தேர் உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியவர்கள் அனைவருக்கும் எம்பெருமானின் நல்லருள் கிடைக்க இறைவனை வேண்டி ஆசிகூறி அமைகின்றேன்.

**"லோஹா சமஸ்தா சுகினோ பவந்து"**

**ஆலய மஹோற்சவ பிரதம குரு**
**"ஆகமகிரியாபாவனர்"**
**சிவஸ்ரீ நாராயண சண்முகநாதகக்குருக்கள்,**
**வவுனியா.**



### ஆலய பிரதம குருவின் அருளாசி

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் இரதோற்சவ சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகன் அவனே முழுமுதற்கடவுள் விநாயகனை வணங்காமல் நாம் எக்காரியத்தைத் தொடங்கினாலும் அது பூரணமாகாது.

அல்வாய் வடக்கு குருக்கட்டில் அரசடிபதியில் பதியுறையும் விநாயகன் எம் பிணிகளைத் தீர்க்க வல்லவன்.

இன்றைய இரதோற்சவ திருநாளிலே விநாயகன் திருத் தேரிலே ஆரோகணிக்கின்றான். அவன் வடம் தொட்டிழுத்து நம் பிணி தீர்ப்போமாக.

**"லோஹா சமஸ்தா சுகினோ பவந்து"**

**உலக புஸ்பராஜக் குருக்கள்**
**ஆலய பிரதம குரு**



### கிராம சேவகரின் வாழ்த்துச் செய்தி

சித்தியும் புத்தியும் வழங்கி வினை தீர்க்கும் விநாயகனாம் அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் திருத்தலத்து மகோற்சவத் திருத்தேர் உற்சவ சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பேறே எனக் கருதி

சோழர்கால ஆட்சியின் சிறப்பினையும் அம் மக்கள் செல்வச்செழிப்போடு பொற்கால வாழ்வு வாழ்ந்ததனையும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கோபுரம் பல நூற்றாண்டுகள் கடந்து இன்றுவரை பறைசாற்றி நிற்கின்றது.

அதேபோல் வட அல்வையில் அமையப்பெற்ற அரசடி விநாயகர் ஆலயத்தில் அமையப் பெற்ற நாற்திசை கோபுரங்கள் பிரமாண்டமாக வானளாவ உயர்ந்து இம் மக்களின் சைவப் பற்றினையும், ஒற்றுமையினையும் விநாயகர் அருள் கிடைக்கப்பெற்று செழிப்போடு வாழ்வதனையும் சான்று பகிர்கின்றன.

அரசடி விநாயகர் திருத்தலத்தின் கண்கவர் அழகு ஒரு தசாப்த காலத்தினுள் அல்வாய் மண்ணின் அடையாளமாக மாறியுள்ளதனை காட்டுகின்றது.

இத் திருத்தலத்தின் இரதோற்சவம் சிறப்புற நடைபெற்று நாற்திசையும் கோபுரங்கள் உயர்ந்து நிற்பது போல் நாற்புறம் வாழ் பக்தர்கள் வாழ்வு உயர்வடைய விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**த.அரவிந்தராம்**
**கிராம சேவகர், அல்வாய் வடக்கு, J/400**



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் வடபுலத்தே வடமராட்சியில் அல்வாய் வடக்கு குருக்கட்டுப் பதிதனிலே வீற்றிருந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுவது பெருமகிழ்ச்சிக்குரியது. அழகிய சித்திரத் தேரில் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

இந் நன்நாளில் விநாயகப் பெருமானின் இஷ்டசித்திகள் அடியவர்கள் அனைவருக்கும் கிடைக்க விநாயகப்பெருமானின் பாதக்கமலங்களை பணிந்து வேண்டுகின்றேன்.

**பேரம்பலம் வரோதயன், பரிபாலன சபைத் தலைவர்,**
**அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தானம்.**

### தேர்த்திருவிழா - உபயகாரர் உள்ளத்திலிருந்து...

ஒவ்வொரு ஊருக்கும், அங்கு அமைந்த கோவில்களுக்கும் சிறப்பும் பெருமையும் தருவன அங்கு நடைபெறும் விழாக்களே ஆகும். நித்திய, நைமித்திய, காமிய விழாக்கள் உரிய விதிப்படி கோவிலில் நடத்தப்படும் போது அதன் பலாபலனை ஊர்மக்கள் பெறுகிறார்கள். இதனால் ஊர்ச்சிறப்பு, கோவில் சிறப்பு உயர்வடைந்து செல்ல மக்களின் பக்தி மேலீடும் மேலோங்கி செல்கிறது.

ஆலய திருவிழாக்களில் மிக உயர் இடம் வகிப்பது இரதோற்சவமாகும். நாம் முதலில் நினைக்கும் பிரணவ சொருபியான விநாயகப் பெருமானுக்கு வழிபாடு அனுட்டானம் செய்வது உள்ளத்தோடு இணைந்த கடமையாக, முதல் வணக்கமாகக் கொள்கின்றோம்.

பருத்தித்துறை, அல்வாய் கிராமத்தின் மத்தியில் அமைந்த குருக்கட்டு, அரசடி விநாயகர் தேவஸ்தானமானது 2024 ஆம் ஆண்டு சம காலத்தில் நான்கு இராஜகோபுரங்கள் நான்கு வாயில்களிலும் அமைக்கப்பட்டு, ஆலய திருப்பணி வேலைகள் இந்திய ஆச்சாரியர்களின் அழகிய வேலைப்பாடுகளுடனும் கூடிய ஆலயமாக உருப்பெற்று 08.09.2025 இல் மூன்றாவது கும்பாபிஷேகம் காணப்பெற்றதைத் தொடர்ந்து, வருடாந்த மகோற்சவம் இடம்பெற்று வருகின்றது.

ஆலயத்தில் இன்றைய நாள் 11 ம் திருவிழாவாக, இரதோற்சவம் இடம்பெறுகிறது. எம்பெருமான் அழகிய சித்திரத் தேரில் வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் சிறப்புமிக்க இந்நாளில் ஆலயம் சார்ந்த மக்கள் இலங்கையின் ஆங்காங்கே வசித்து வருகின்ற அடியவர்களும் மற்றும் இவ் மகோற்சவ சிறப்பை நேரில் காண புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பலர் வந்தும், கலந்து கொள்கின்ற போது பேறு பெற்றவர்களாக உள்ளனர்.

இற்றைக்கு சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் எம் முன்னோர்கள், கிராமிய தெய்வங்களுக்கு, வணக்கத்தை மேற்கொண்ட வழிபாடு படிப்படியான வளர்ச்சிப் போக்கில் பரிணாமம் பெற்று, நீண்ட காலத்திற்கு முன்னரே கட்டடங்கள் கொண்ட ஆலயமாக இருந்த விநாயகப் பெருமான் இருப்பிடத்தை புலம்பெயர்ந்த எம் உறவுகளின் ஆலயம் சார் பற்றுறுதியும் இங்கு வாழும் மக்களினதும், பரிபாலன சபையினதும், திருப்பணிச் சபையினதும் ஆக்க பூர்வ செயற்பாடுகளினால் ஒரு குறித்த காலத்தில் திருப்பணி வேலைகள், அழகுற மேற்கொள்ளப்பட்டு எல்லோரினதும் மனதில் பக்தி பூர்வமான, மன எழுச்சி பெற்றுள்ளதை நாம் உணர்கின்றோம்.

இரதோற்சவ இந் நாளில் விநாயகப் பெருமானின் தேர்வடம் பிடித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்**

(4509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இதுவரை
## 25,000 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

**இந்த வருடத்தின் நேற்று முன்தினம் வரை 25,055 டெங்கு நோயாளர்கள், அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.**

அதேநேரம், டெங்கு நோயினால் 13 பேர் உயிரிழந்ததாகவும் அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய மழையுடனான கால நிலையை அடுத்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயினால் 25 சத வீதமான, மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தநிலையில் காய்ச்சல், வாந்திபேதி ஏற்படுமிடத்து வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் டெங்கு பெருக்கம் உள்ள இடங்களைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு, உரியப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முகக்கவசத்திற்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாடு ஒரு புதிய நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொள்வதால், முகக்கவசங்கள் மற்றும் கை சுத்திகரிப்பான்களுக்கு உடனடியாக கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும் என்று தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டார்.

ஊடக சந்திப்பில் உரையாற்றிய சம்பத், தற்போதைய சந்தை விலைகளின் படி, ஒரு முகக் கவசம் 50 ரூபாவாக உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர், அறுவை சிகிச்சை முகக்கவசத்தின் விலையை ரூ.10 ஆகக் குறைக்க வேண்டும் என்று கோரினார்.

மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பே விலை உயர்வுக்குக் காரணம் என்று உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த விடயத்தின் தாமதமின்றி தலையிடுவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று சம்பத் வலியுறுத்தினார். (நி-8)

## அரச வருமானத்தில் அதிகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் அரச வருமானம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2024 வருடத்தின் முதல் மாதங்களில் 1,218.07 பில்லியனாக இருந்த அரச வருமானம், இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் 236.60 பில்லியன் ரூபாவால் அதிகரித்து 1,454.67 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

இது 19.42% சதவீத அதிகரிப்பாகும். 2025 ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 463.19 பில்லியன் ரூபா வரி மூலம் கிடைக்கப் பெற்ற வருமானமாகும்.

குறிப்பாக அந்த மாதத்தில் வாகன இறக்குமதி தடை தளர்த்தப்பட்டதன் காரணமாக இவ்வாறு வரி வருமானம் அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது. (நி)

## உதய கம்மன்பிலவிடம் 4 மணி நேர வாக்குமூலம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

இலங்கை சுங்கத்திடம் இருந்து 323 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக உதய கம்மன்பில குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை காலை முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் இருந்து 4 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், வாக்குமூலம் வழங்கிய பின்னர் உதய கம்மன்பில குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார். (நி)

## சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

நிலவும் மழையுடனான வானிலையால் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாச நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானம் தொடர்பான விசேட வைத்தியர் அத்துலலியனபத்திரன பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானது.

சுவாச நோய்கள் தொடர்பில் முதியோர், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள், நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட தரப்பினர் விசேட கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.

நீரிழிவு, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் சுவாசத் தொற்றுகளுக்கு உள்ளாகும்போது உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியம்.

சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாவர்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(கொழும்பு)


மீண்டும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால் கடந்த காலத்தை விட கூடுதல் நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மயிலிட்டி துறைமுகத்தை விரிவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## கொழும்பிலிருந்து மும்பை சென்ற கப்பலில் தீப்பரவல்

### நால்வர் மாயம், ஐவர் காயம்



(கொழும்பு)

கொழும்பிலிருந்து மும்பைக்குச் சென்ற கொள்கலன் கப்பல் கேரளாவில் கோழிக்கோடு அருகே நடுக்கடலில் நேற்று தீ விபத்திற்குள்ளானது.

சிங்கப்பூருக்குச் சொந்தமான கப்பலில் தீ ஏற்பட்ட வேளையில், விபத்து நடந்த இடத்திற்கு விரைந்த இந்திய கடற்படை கப்பல்கள், தீயை அணைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

12.5 மீற்றர் இழுவை கொண்ட 270 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பல் ஜூன் 7 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டு மும்பைக்குச் சென்ற போது கப்பலில் ஏற்பட்ட விபத்தில் 4 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 5 பேர் காயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

## மின்சாரக் கட்டணம் திருத்தம் இந்த வாரம் இறுதி முடிவு

(கொழும்பு)

மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவு இந்த வாரம் அறிவிக்கப்படும் என்று இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் குறித்து நடத்தப்பட்ட பொது ஆலோசனை செயல்முறையின் போது பெறப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட எழுத்துமூல சமர்ப்பிப்புகளை மதிப்பாய்வு செய்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையகமான இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார வாரியம் ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலத்திற்கு 18.3% கட்டண உயர்வைக் கோரியிருந்தது. அத்துடன் அதிகரித்து வரும் இயக்க செலவுகளை நிர்வகிப்பதற்கும் முந்தைய கடன்கள் உட்பட கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் இது அவசியம் என்று தெரிவித்திருந்த நிலையில் மின்சாரக் கட்டணத்திற்கான திருத்தம் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 2026 இந்தியன் பிரீமியர் லீக்தொடரில் தடையை எதிர்கொள்ளுமா ஆர்.சி.பி?

பெங்களூரில் நடைபெற்ற வெற்றி அணி வகுப்பின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, பலர் உயிரிழந்ததையும், காயமடைந்ததையும் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கடுமையான நடவடிக்கை எடுக்க பரிசீலித்து வருகிறது.


இதனால், 2026 இந்தியன் பிரீமியர் லீக் சீசனில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு தடை விதிக்கப்படலாம் என்றும் இந்திய ஊடகங்கள் ஆதாரங்களைக் காட்டி செய்தி வெளியிட்டுள்ளன.

2025 ஐ.பி.எல். பட்டத்தை வென்ற பிறகு,சின்னசாமி மைதானத்திற்கு வெளியே ஆர்.சி.பி அணிக்கு வெற்றி அணிவகுப்பு மற்றும் பிரமாண்ட கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதற்கிடையில்,மைதானத்திற்கு வெளியே கூட்ட நெரிசல் ஏற்பட்டது.இதில் 11 பேர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதன் பின்னர், ஆர்.சி.பி அணி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன் கர்நாடக கிரிக்கெட் சங்கத்தின் இரண்டு அதிகாரிகளும் இராஜினாமா செய்துள்ளனர்.அத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவை அனைத்திற்கும் நடுவில் ஆர்.சி.பி அணி சிக்கியுள்ளது.

இந்த விடயத்திற்குப் பின்னர், 2026 ஐ.பி.எல் சீசனில் ஆர்.சி.பி பங்கேற்பது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுபாட்டு வாரியம் விரைவில் ஒரு பெரிய முடிவை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.(நி-3)

## தாய்வான் பகிரங்க மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் இலங்கைக்கு ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம்

சைனீஸ் தாய்ப்பே தேசத்தில் அமைந்துள்ள தாய்ப்பே நகரில் வார இறுதியில் நடைபெற்ற தாய்வான் பகிரங்க மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் ஒரு வெள்ளி உட்பட இரண்டு பதக்கங்களை இலங்கை வென்றெடுத்தது.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் டில் ஹானி லேக் கம்கே வெள் ளிப் பதக்கத்தையும் ஆண்களுக் கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சமோத் யோதசிங்க வெண் கலப் பதக்கத்தையும் வென்றெ டுத்தனர்.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் 56.62 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்த டில் ஹானி லேக் கம்கேவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. ஆனால், 2023 இல் அவர் நிலை நாட்டிய 61.57 மீற்றர் என்ற தேசிய சாதனையை அவரால் இந்தப் போட்டியில் நெருங்க முடியாமல் போனது.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.38 செக்கன்களில் சமோத் யோதசிங்க நிறைவு செய்து மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

முதலாவது தகுதிகாண் சுற்றை 10.29 செக்கன்களில் சமோத் யோதசிங்க நிறைவு செய்திருந்த போதிலும் இறுதிப் போட்டியில் அவரது நேரப் பெறுதி 3 ஆவது இடத் தையே பெற்றது. (நி-3)

## ஐரோப்பிய நேஷன்ஸ் லீக் கால்பந்து தொடர்

## சம்பியனானது போர்த்துக்கல் ஆனந்தக் கண்ணீரில் ரொனால்டோ




நேஷன்ஸ் லீக்கின் இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணி ஸ்பெயினை வீழ்த்தி சம்பியனாகியது. கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆனந்தக் கண்ணீர்வடித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியின் அரினா முனிச்சில் உள்ள அலையன்ஸ் அரங்கில் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில், யூரோ சம்பியனை பெனால்டி ஷூட் அவுட்டில் வீழ்த்தி, போர்த்துக்கல் தனது இரண்டாவது நேஷன்ஸ் லீக் பட்டத்தை வென்றது.



மேலதிக நேரத்தில் 2-2 என சமநிலையில் இருந்த போர்த்துக்கல், தனது 5 ஸ்பாட் கிக்குகளையும் பயன்படுத்தி பெனால்டி ஷூட் அவுட்டில் ஸ்பெயினை 5-3 என வீழ்த்தியது.


போட்டியை மேலதிக நேரத்திற்கு எடுத்துச் செல்ல கோல் அடித்த ரொனால்டோ, தனது அணி போட்டியை வென்ற பின்னர் ஆனந்தக் கண்ணீர்விட்டார்.

இறுதிப் போட்டியில் ரொனால்டோவின் கோல் அவரது சர்வதேச வாழ்க்கையில் 138 ஆவது கோல் ஆகும்.

இந்தக் கோலின் மூலம், சர்வதேச கால்பந்தில் அதிக கோல் அடித்த வீரராக, லியோனல் மெஸ்ஸி மற்றும் சுனில் சேத்ரி போன்றவர்களை முந்தினார். (நி-3)

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்

## கோப்பை வென்றார் அல்காரஸ் போராடி வீழ்ந்தார் சின்னர்



பிரெஞ்சு ஓபன் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் ஜானிக் சின்னரை வீழ்த்தி கார்லோஸ் அல்கராஸ் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

இரண்டு செட்கள் பின் தங்கிய நிலையில் இருந்து மீண்டு வந்து, இதுவரை யாரும் சாதிக்காத ஒரு சாதனையை அல்கராஸ் இந்த ஆட்டத்தில் படைத்தார்.

அவர் ஐந்து செட்கள் கொண்ட ஒரு அற்புதமான வெற்றியை 4-6, 6-7 (4), 6-4, 7-6 (3), 7-6 (10-2) என்ற கணக்கில் பெற்றார்.

ஐந்து மணி நேரம் 29 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டி, 2012 ஆம் ஆண்டு நோவக் ஜோகோவிச் சுக்கும் ரஃபேல் நடாலுக்கும் இடையிலான அவுஸ்திரேலிய ஓபனுக்குப் பிறகு இரண்டாவது மிக நீண்ட ஆண்கள் முக்கிய இறுதிப் போட்டியாகும் என்று அமெரிக்க விளையாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த குறிப்பிடத்தக்க வெற்றி 22 வயதான ஸ்பெய்ன் வீரருக்கு, அவரது ஐந்தாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வழங்குகிறது, அத்துடன் 22 வயது 34 நாட்களில், ஓபன் சகாப்தத்தில் ஐந்து முக்கிய பட்டங்களை வென்ற மூன்றாவது இளைய வீரர் இவராவார். (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்திற்குள் அறுவருக்கு சிக்குன்குனியா நோய்த்தொற்று

(கொழும்பு)

பொகவந்தலாவை. மாவட்ட மருத்துவமனையில் பணிபுரியும் 6 தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்திற்குள் சிக்குன்குனியா நோய்த் தொற்றி யிருப்பது இனங் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் புகை விசிறல் நடவடிக்கைகள் தொடங்கப்பட் டுள்ளது. என்று பொகவந்தலாவை மாவட்ட மருத்துவமனையின் மருத் துவர் ஏ.எஸ்.கே. ஜெயசூரியா தெரிவித்தார்.இந்த நோயால் பாதிக்கப்பட்ட 6 தொழிலாளர்களும் பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அந்த அலுவலக அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் புகை விசிறல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (நி)

## 32 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்

மலர்வு 01 . 01 . 1954



உதிர்வு 07 . 06 . 1993

அமரர். திருமதி

### நகுலேஸ்வரி நகுலராசா

திதி: சதுர்த்தசி(10.06.2025)

வையம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
ஆண்டுகள் முப்பத்திரெண்டே– ஆனாலும்
இதயம் தொட்ட நினைவுகள்
இன்றும் உமை எண்ணித் தவிக்கின்றன.
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் என்றும்
அன்புக் குடும்பமாக

ராஜன் காட்வெயார்,
பருத்தித்துறை

கணவர்: மு. நகுலராசா
மற்றும் குடும்பத்தினர்.
அம்பன், குடத்தனை

rc-3165)

## கண்ணீர் அஞ்சலி



பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு
வலய பிரதிப் பதிவாளர் நாயகம்
ஆனந்தி ஜெயரட்ணம்
அவர்களின் பாசமிகு தாயார்

### அமரர். நவமணி ஜெயரட்ணம்

அவர்களின் மறைவு குறித்து குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


(c-3166)

பதிவாளர் நாயகம்
திணைக்களம், யாழ்ப்பாணம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் கிளிநொச்சி மேற்கு
நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனை
தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய
திரு.கோ. பகீரதன் அவர்களின் அன்புத் தந்தை



### அமரர் கந்தையா கோவிந்தபிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் – வடமாகாணம்

## இதய அஞ்சலி

யாழ்.மாவட்ட விவாக,பிறப்பு,இறப்பு
பதிவாளர் சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறையோடு
செயற்படும் வடக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகம்
ஆனந்தி ஜெயரட்ணம் அவர்களின் பாசமிகு தாயார்

### அமரர். நவமணி ஜெயரட்ணம்

அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(சி-3167)

யாழ்.மாவட்டம்.

விவாக,பிறப்பு,இறப்பு
பதிவாளர் சங்கத்தினர்.

## இராசிபலன்

10.06.2025
வைகாசி 27, செவ்வாய்க்கிழமை
அனுசம் முன்னிரவு 6.48 மணிவரை
சதுர்த்தசி பிற்பகல் 12.11 மணிவரை

சுபநேரம் 10.22-11.52மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பொறுப்புக்கள் கூடும், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், விரயங்கள் கூடும்.

**கடகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வங்கி சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடு வீர்கள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், பண வரவால் சந்தோசமடைவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**சிம்மம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** ஆன்மிகப் பணியில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** பயணங்கள் கைகூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொலை பேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.

**கன்னி** தொழிலில் போட்டிகளை முறியடித்து முன்னேற்றம் காணும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் சிறுசிறு இடையூறுகள் ஏற்பட்டு விலகும், சுபவிரயங்கள் அதிகரிக்கும், மறக்கமுடியாத சம்பமொன்று இடம்பெறலாம்.

**மீனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

கவனமும் முயற்சியும் அதிஷ்டத்தை கொண்டு வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் கழிவகற்றல் நிலையத்தை அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**"இணுவில் காரைக்கால் சிவன் கோவில் புனிதத்தை மீட்டெடுப்போம்" என காரைக்கால் திண்மக் கழிவகற்றல் நிலையத்திற்கு எதிராக யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

சட்டவிரோதமாக திண்மக் கழிவகற்றல நிலையம் அமைக்கப்பட்டு இரசாயன, இலத்திரனியல் மருத்துவக் கழிவுகளை வகைப்படுத்தாது தீயிட்டுக் கொழுத்தப் படுவதால் சூழல் மாசடைவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் , சித்தர்கள் பலர் வாழ்ந்து சமாதியடைந்த இடமாகவும், சமாதி கோவில், ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைக்கால் சிவன் கோவில் ஆகியவை அமைந்துள்ள புண்ணிய பூமியில் கழிவுகள் கொட்டப்பட்டு , சேகரிக்கப்படும் இடமாக காணப்படுவதால் , குறித்த கழிவகற்றல் நிலையத்தை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் , இது வரையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.(நி-8-33)




## சுதுமலை அம்பாளுக்கு இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் மஹோற்சவ தினங்களில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)



நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி (நல்லூர் சிவன் கோயில்) ஆலய தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (படம்:-சிவசாந்தன்)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் புத்தூர் வாதரவத்தை விக்கினேஸ்வரா கல்லூரி மாணவர்களுக்கு புத்தகப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. ([illegible])

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 250 | 200 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 700 | 700 |
| தக்காளி | 600 | 700 | 700 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 240 |
| கோவா | 450 | 500 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 750 | 700 | 700 | 800 |
| பூசணி | 100 | 150 | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-300 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 150 | 115 | 130 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 200 | 350 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 350 | 200 |
| லீக்ஸ் | 350 | 450 | 400 | 350 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 500 | 850 | 600 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1200 | 1200 | 2000 |
| போஞ்சி | 400 | 650 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 400 | -- | 400 |
| கீரை – 1 பிடி | 120 | 100-150 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 250 | 100-220 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 550 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | - | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 02

**நகர்ச்சிறப்பு**

காப்பியங்களைப் படைக்கின்றவர்கள் நகர்ச்சிறப்புப் பற்றி தமது பரிந்துரையை முன்வைப்பது வழக்கம்.

இவ்வாறு நகர்ச்சிறப்பைக் கூறுவதன் மூலம் அந்தப் பிரதேசத்தின் மகிமையும் பெருமையும் வெளிப்படுத்தப்படும்.

அந்த வகையில் சுமார் 200 ஆண்டுகள் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சி அதிகாரத்திற்குள் இருந்த புதுச்சேரியின் நகர்ச் சிறப்பைக் கூறுவதற்குப் பஞ்சமில்லை எனலாம்.

அந்தளவிற்கு புதுச்சேரி பல்வகைப் பெருமைகளையும் தகைமைகளையும் தன்னகத்தே கொண்டமைந்த மாநிலம்.

ஆம், வள்ளுவப்பெருமான் கூறியது போல தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு என்பதற்குச் சான்றாக விளங்குவது புதுச்சேரி.

குறைவில்லாத விளைபொருட்களும் நடுநிலையாளர்களும் குறைவில்லாத செல்வந்தர்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாகப் புதுச்சேரியை நாம் பார்க்க முடியும்.

தனவந்தர்களும் தமிழ் வளர்க்கும் ஆர்வலர்களும் குன்றாத விளைபொருளும் கொண்டமைந்த புதுச்சேரி, பாவேந்தன் பாரதிதாசனை நமக்குத் தந்த மண்.



புதுவையிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயம்

புருசோத்தமன்

அதுமட்டுமல்ல, மகாகவி பாரதியார் பத்து ஆண்டுகள் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்திருந்தார் எனும் போது, பெரும் புலவன் சுப்பிரமணிய பாரதியாரைக் காப்பாற்றித் தந்த மண் என்ற பெருமையும் புதுவைக்கு உண்டு.

இது பற்றி இக்கட்டுரையின் பிற்பகுதியில் நாம் பிரஸ்தாபிக்கலாம்.

இப்போது, புதுச்சேரியின் நகர்ச் சிறப்புக்குப் பெருமை சேர்ப்பதாக பிரெஞ்சுக்காரர்களின் கட்டட அமைப்பும் வீதிகளின் நிர்மாணிப்பும் அமைந்துள்ளன.

பொதுவில் பிரெஞ்சுக் கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டமைந்த, மிக நீண்டதும் நெடியதுமான கட்டடங்கள் புதுவையின் பெரும் புகழுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

அதிலும் புதுவையில் உள்ள பிரான்சிய தூதுவராலயம் அமைந்த இடத்திற்குச் செல்கின்ற போது நாம் எங்கு நிற்கின்றோம் என்ற கேள்வி மனதில் எழுவதை உணரமுடியும். அந்த அளவிற்கு புதுவையில் அமைந்த பிரான்சியக் கட்டுமானத்தின் நுட்பங்கள் மனதை ஈர்க்கவல்லன.

தவிர, புதுச்சேரியில் அமைந்த வீதிகள் வளைவு நெளிவு இன்றி மிகவும் நேரியதாக அமைந்திருப்பது அங்கு நடந்த பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியின் நேர்மையைச் சுட்டிநிற் கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

அதிலும், புதுச்சேரியின் கடற்கரையோரமாக அமையப்பெற்ற அரச நிர்வாகக் கட்டுமானங்கள், தலைமைச் செயலகம், முதலமைச்சரின் அலுவலகம் என்பன அமைதியாக இயங்குகின்ற



புதுவையின் தலைமைச் செயலகம்

பாங்கில், புதுச்சேரியின் அரச நிர்வாகம் அறத்துடன் நடந்தாகுவது உறுதியாகிறது.

அதேவேளை உல்லாச விடுதிகளுக்கும் புதுவையில் குறைவில்லை என்பதால், உள்நாட்டவர்களை மட்டுமன்றி, வெளிநாட்டவர்களையும் ஈர்த்தெடுக்கின்ற மாநிலமாக புதுவை மிளிர்கிறது.

இதையும் கடந்து இப்போதும் பிரான்ஸ் நாட்டின் ஈடுபாடும் அந்த நாட்டவர்களின் வருகையும் தொடர்வதுடன் புதுச்சேரியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்கின்றவர்களுக்கு எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் பிரான்ஸ் நாடு விசா வழங்குகின்ற நடைமுறைகளும் உண்டு.

இவ்வாறாக பிரான்ஸ் நாட்டுத் தொடர்புகளை இப்போதும் பேணிக்கொள்கின்ற புதுச்சேரி தமிழ் வளர்க்கும் பெரும் பணியையும் குறைவின்றி செய்து வருவதுதான் அதன் அற்புதம் எனலாம். இங்குதான் புதுச்சேரி கம்பன் கழகத்தின் தமிழ்ப்பணி கண்டு வியக்காமல் இருக்க முடியாது.

(தொடரும்...)

## மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்பனை செய்த வர்த்தகர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாக போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்த வர்த்தகர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

சாவகச்சேரி நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் சிலர் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதாக சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தின் கீழ் இயங்கும் போதைப்பொருள் குற்றச் செயல் தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைவாக சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலையின் தரம் 10 மற்றும் 11 மாணவர்கள் மூவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வர்த்தக நிலையத்தை நடத்தும் 45 வயதான வர்த்தகர் ஒருவரிடம் இருந்து போதை மாத்திரைகள் பெற்றுக்கொள்வது தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த வர்த்தகர் 330 போதைமாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டதுடன் அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பது தெரியவந்துள்ளது.

அதனை தொடர்ந்து குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தான் ஐஸ் போதைக்கு அடிமையானவர் எனவும் போதை மாத்திரைகளை பாடசாலை மாணவர்களுக்கு விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் ஐஸ் போதைப்பொருளை பெற்று பாவித்து வருவதாகவும் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார். (8-30)


**Kilinochchi District Secretariat**

**Correction on INVITATION FOR BIDS (IFB) on Non Consulting Services-2026**

**Advertisement made on 06.06.2025 in this newspaper is corrected as fallows**

"1. A complete set of Bid documents will be issued from 09.06.2025 up to 27.06.2025 on working days from 9.00a.m. to 3.00.p.m"

Other all terms and conditions will be same as stated in the IFB

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Kilinochchi, T.P/ Fax: 021 228 5352,**
**Web http://kilinochchi.dist.gov.lk**


## சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார பணி இடைநீக்கம்?

(கொழும்பு)

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவை பணி இடைநீக்கம் செய்ய அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் பெயரிடப்படாத கைதிகளை விடுவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுடனான தொடர்பிலேயே சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவை பணி நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று கொக்குவிலில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கலாநிதி சர்வேஸ்வரன், வேந்தன், ப.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 43 உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# வௌவால் வைரஸ் பீதியில் மக்கள்!

## எச்சரிக்கை விடுக்கும் விஞ்ஞானிகள்



(வோஷிங்டன்)


கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு ஆபத்தான வைரஸ், மனித குலத்தை நெருங்கி வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வௌவால்களில் காணப்படும் 'HKU5' என்ற துணை வகை வைரஸ், ஒரு சிறிய மரபணு மாற்றத்துடன் மனித செல்களுக்குள் நுழைந்து, அடுத்த உலகளாவிய தொற்று நோயை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் வட கரோலினா பல்கலைக்கழகத்துடன் இணைந்து வோஷிங்டன் மாநில பல்கலைக்கழகம் தலைமையிலான இந்த ஆய்வின் விவரங்கள், முன்னணி அறிவியல் இதழான "நேச்சர் கம்யூனிகேஷன்ஸ்" இல் வெளியிடப்பட்டன

வோஷிங்டன் மாநில பல்கலைக்கழகம் தலைமையிலான ஆய்வின்படி, HKU5 வைரஸ்கள் மனித செல்களில் உள்ள ACL2 ஏற்பியைப் பயன்படுத்த முடியும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. COVID-19 ஐ ஏற்படுத்தும் SARS-CoV-2 வைரஸூம் அதே ACE2 ஏற்பியைப் பயன்படுத்துகிறது.

இந்த HKU5 வைரஸ், மத்திய கிழக்கு சுவாச நோய்க்குறி கொரோனா வைரஸ் (MERS-CoV) உடன் நெருங்கிய தொடர்புடையது. MERS நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பு விகிதம் சுமார் 34% என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த வைரஸ்கள் ஜப்பானிய வீட்டு வௌவால்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும், சமீபத்திய ஆய்வுகள் இவை மின்க்ஸ் போன்ற இடை நிலை விலங்குகளுக்கு பரவி வருவதாகக் கூறுகின்றன.

இது மனிதர்களுக்கு பரவுவதற்கான முதல் படியாக அமையலாம் என நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

WSU வைராலஜிஸ்ட் மைக்கேல் லெட்கோ, "இந்த வைரஸ்கள் மனிதர்களுக்குள் நுழைந்ததற்கான ஆதாரம் இல்லாவிட்டாலும், அதற்கான திறன் உள்ளது.

எனவே அவற்றைக் கண் காணிப்பது முக்கியம்" என்று எச்சரித்துள்ளார். (க-8)

# வணிக மாபியாக்களாலும் அவலத்திற்குள்ளாகும் காசா



(ஜெருசலேம்)

காசாவிற்கு அனுப்பப்படும் நிவாரண உதவிகளை சிலர் அபகரித்து வருவதால் அங்கு விற்கப்படும் பொருட்கள் 500 மடங்கு அதிக விலையில் விற்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக காசாவில் ஒரு கிலோ சீனி இலங்கை மதிப்பில் 17,000 ரூபாவிற்கு விற்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

காசாவிற்கு அனுப்பப்படும் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்த இஸ்ரேல், உலக நாடுகளின் அழுத்தத்தை அடுத்து, மார்ச் மாதம் முதல் மிகவும் சிறிய அளவிலான பொருட்களை உள்ளே அனுப்பத் தொடங்கியிருந்தது.

பொருட்களை சிலர் அபகரித்து அதனை அதிக விலைக்கு காசாவில் விற்பனை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவின் படி, காசாவில் ஒரு லீற்றர் சமையல் எண்ணெய் 15,000 ரூபாய்க்கும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 7,000 ரூபாய்க்கும் ஒரு கோபி 6,000 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றது.

இஸ்ரேலின் தாக்குதலினால் இவ்வாறான வணிக மாஃபியாக்களினாலும் காசாவில் அவல நிலை தொடர்கின்றது. (க-8)



# காசா செ… மனித உ…

(காசா)••••

## கிரெட்டா து… செயற்பாட்டாள… வுக்கான ம… இஸ்ரேல் படைய… பெரும் பரபரப…

பாலஸ்தீனத்தின் காசா பகுதி ஹமாஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இஸ்ரேலுக்குள் நுழைந்து 1,200 அப்பாவி பொது மக்களை சுட்டுக் கொன்றனர். இதையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் தொடங்கியது.

இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் உள்ள மக்கள்

# புதிய கட்சி… அறிவித்தா…



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் தொழிலதிபர் எலன் மஸ்க்கிற்கும் இடையில் மோதல் ஏற்பட்டு வரும் நிலையில், "தி அமெரிக்கன் பார்ட்டி" என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...சென்ற கப்பலை சிறைபிடித்த இஸ்ரேல்

# ...உரிமை செயற்பாட்டாளர்கள் கைது

**...துன்பர்க் உள்ளிட்ட சமூக ...ாளர்களுடன் சென்ற காசா ...மனிதாபிமான கப்பலை ...டையினர் சிறைபிடித்த சம்பவம் ...ரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அங்குள்ள மக்களுக்கு பல்வேறு நாடுகள் உதவிகள் செய்து வருகின்றன.

இந்நிலையில், காசா பகுதிக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் கொண்டு சென்ற "மட்லீன்" என்ற கப்பலை சர்வதேச கடல்பரப்பில் வைத்து இஸ்ரேல் படையினர் சிறைபிடித்தனர்.

மேலும், அந்தக் கப்பலில் பயணித்த காலநிலை செயற்பாட்டாளர் கிரெட்டா துன்பர்க் மற்றும் ஐரோப்பிய பார்லிமென்ட் உறுப்பினர் ரிமா ஹசன் உள்ளிட்டோரை கைது செய்தனர்.

சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை தொடர்ந்து, கப்பலுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாக ப்ரீடம் ப்ளோடில்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், "மல்டீன் கப்பலை காசாவுக்கு செல்ல அனுமதிக்க மாட்டோம். தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காசாவில் உள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கப்பலில் இருந்தவர்கள் கைகளை உயர்த்திய நிலையில் அமர்ந்திருக்கும் போட்டோ வெளியாகி சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## ...சிப் பெயரை ...தார் மஸ்க்



புதிய கட்சியை எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அரசு கொண்டு வந்த வரி மற்றும் செலவு மசோதாவால், அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் டெஸ்லா நிறுவனரும் ட்ரம்பின் தீவிர ஆதரவாளராக இருந்தவருமான எலான் மஸ்கிற்கும் இடையிலான நட்புறவில் விரிசல் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இருவரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி, பொதுவெளியிலேயே சண்டையிட்டு வந்தனர்.

இதனிடையே, 80 சதவிகித நடுத்தர மக்களை பிரதிநிதித்துவப்படுத்த புதிய கட்சி தேவையா? என்று எக்ஸ் தளத்தில் எலான் மஸ்க் கருத்துக் கணிப்பு நடத்தினார்.

இந்தக் கருத்துக் கணிப்புக்கு 80 சதவிகிதத்தினர் (56.30 இலட்சம் பேர்) "ஆம்" என்று பதிலளித்த நிலையில், புதிய கட்சிக்கு "தி அமெரிக்கன் பார்ட்டி" என்று எலான் மஸ்க் பெயரிட்டு அறிவித்துள்ளார். (நி-8)

## ஓடும் ரயிலிலிருந்து வீழ்ந்து 5 பயணிகள் உயிரிழப்பு



(டில்லி)

மும்பையில் நேற்று முன்தினம் காலை அதிக நெரிசல் கொண்ட ஓடும் உள்ளூர் ரயிலில் இருந்து தவறி விழுந்து ஐந்து பேர் உயிரிழந்ததாக இந்திய ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ் ரயில் நிலையத்தில் இருந்து லக்னோ நோக்கிச் சென்று கொண்டிருந்த 12534 புஷ்பக் ரயிலிருந்து தவறி வீழ்ந்தே பயணிகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரயிலில் அதிக கூட்ட நெரிசல் காரணமாக சுமார் 10-12 பயணிகள் ஓடும் ரயிலில் இருந்து விழுந்ததாகக் கூறப்படுகிறது.

ரயில்வே அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பிளாவளையானுக்கு இன்று இரதோற்சவம்

யாழ்ப்பாணத்து இந்து சமய மரபில் திருக்கோவிற் பண்பாடும், வழிபாட்டு மரபும் சிறப்புடையன. கோவில்கள் நிறைந்த சிறப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரிய தனித்துவங்களில் ஒன்றாகும். யாழ்ப்பாணத்துச் சைவ மரபில் விநாயகர் முதல் வைரவர் ஈறாக எண்ணிறைந்த பெருங்கோவில்களும் குலக்கோவில்களும் விளங்குகின்றன. அத்தகைய சிறப்பில் வரலாற்றுச் சிறப்பும் கலைப் பாரம்பரியத்தின் மிடுக்கும் நிறைந்த திருக்கோவிலே அளவெட்டி கும்பிளாவளை அருள்மிகு பிள்ளையார் ஆலயம் ஆகும். இவ்வாலயம் வெள்ளெருக்கு மரத்திடலின் நடுவில் தான்தோன்றியாகத் தோன்றிய மூலவரையுடையதாகவும் அருகே கொம்பு துவளை, கும்பல் ஆவளை, கும்பிளாவளை எனப் பெயர் மருவியது என்பர்.

இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பழைமையானது என்கிறது வரலாறு. மாருதப் புரவீகவல்லிக்கு முறைமையாக குதிரை முகம் நீங்குவதற்கு முதற் கடவுளாகிய விநாயகரது சாபம் நீங்கி அருள் பெறுவதற்காக ஏழு விநாயகர் திருவுருவங்கள் ஸ்தாபிக்கப் பெற்றன.

மாருதப் புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு தெற்காக கொல்லங்கலட்டி, வரத்தலவிளான், அளவால்லை, கும்பிளாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய ஏழு தலங்களில் விநாயக சிலைகளை ஸ்தாபித்ததோடு இவ்வேழு ஆலயங்களிற்கும் நடுநாயகமாக விளங்குவதே கும்பிளாவளை ஆகும். இத்தலம் முன்றிற்சோலை, மாவிடுதிட்டி, குமாரத்திகுளம் எனும் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. மாருதப் புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கியது தொடர்பான கதை மரபு மாவிடுதிட்டி, முழுமையாக நீங்கிய தலமே இக்கும்பாவளை எனும் தலமாகும். கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயம் சார்ந்த வரலாறறிந்த தகவல்கள் இவ்வாலயத்தின் திருவூஞ்சல் பதிகத்தின் ஒன்பதாம் பாடலிலும் திருப்பள்ளியெழுச்சி பாடல்களிலும் இராஜகோபுரச் சிற்பங்களிலும் தேர்ச் சிற்பங்களிலும் காண முடிகின்றது.

பிரணவப் பொருளாகவும் முழுமுதற் கடவுளாகவும் விளங்கும் கும்பிளாவளைப் பிள்ளையாருக்கு இன்று நடைபெறவிருக்கும் தேர் உற்சவத்தில் நாம் அனைவரும் வழிபட்டு சிவானந்தப் பெருவாழ்வைப் பெற்றுய்வோமாக.

**சைவப்புலவர்**
**வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் (M.A. பேராதனை)**


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1999- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-10 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Banker
எதிர்பார்ப்பு: Teacher,அரசதொழில்
தொ.இ: B/15602

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-30
உயரம்:5'7"
தகைமை/தொழில்-CIMA, Accoutant(pvt)
எதிர்பார்ப்பு: IT Field
தொ.இ: B/15603

பிறப்பு:1987-RC
உயரம்:5'7"
தகைமை/தொழில்: ITField (German)
எதிர்பார்ப்பு:தகுதியானபெண்.விவாகரத்தானவர்
தொ.இ: B/15605

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்:விசாகம்
12இல் செவ்
கி-பா-36
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L. விற்பனை உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15607

பிறப்பு: 1979- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா- 13 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L.கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்
தொ.இ: B/15608

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி-பா-28
உயரம்: 5'
தகைமை/தொழில்: Bsc,Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT
தொ.இ: G/15601

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA,Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா-24
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - BSc,Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15612

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா-16
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/15618

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# இன்று ஒரு தகவல் 391



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பரதன்...

"என்னை யாருமே சரியாக புரிந்து கொள்கிறார்கள் இல்லை சார்!" என்றார் ஒருவர். "இராமாயணத்திலே வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையே!" என்றேன். "என்ன சார் இது. திடீர் என்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்!" என்றார்.

"இதோ பாருங்கள்!" என்று எனக்கு வந்த ஒரு கடிதத்தைக் காட்டினேன். அது முகம் தெரியாத நேயர் ஒருவர் எனக்கு எழுதிய கடிதம் அதிலே இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார்.

நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால்கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்டபெயரை வாங்கிக் கொடுத்து விடும் நம்மில் பலபேருக்கு அதுமாதிரியான ஒரு "ராசி" உண்டு இவர்கள் எல்லாம் அவர்களுடைய "குரூப்பிலே" பரதனையும் சேர்த்துக்கொள்ளலாம். இராமாயணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம் குணச்சித்திரம் - பரதன். அப்பேற்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

பரதனை பெற்ற அம்மாவே சரியாக புரிந்திருந்தால் என் மகனுக்கு "பட்டம்" சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பார்களா? இது நம் பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்த தாயாருக்குத் தெரியவில்லையே! அவன் வந்து இதைக் கேள்விப்பட்டு அம்மாவைத் திட்டும் போது தானே அவன் எப்படிப்பட்டவன் என்பது புரிந்தது! சரி. அம்மாவை விடுங்கள்! அப்பா அவனை சரியாகப் புரிந்துகொண்டாரா? அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும்போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விடயம் அவருக்குத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியைப் பார்த்து. "நீ எனக்கு மனைவி இல்லை"என்று சொல்லுவ தோட விட்டிருப்பார். "உன் மகன் பரதன் எனக்கு மகனல்ல!"என்றும் சொல்லி விட்டாரே! சரி. அம்மா, அப்பாவை விடுங்கள் சார்!

அமைச்சர்கள்! அவர்களாவது பரதனை சரியாகப் புரிந்து கொண்டார்களா? அதுவும் இல்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன்வீட்டிலேயிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வருகிறான். அவனிடம் போய் "என்ன முடிசூட்டு விழா ஏற்பாட்டை செய்யலாமா?" என்று கேட்கிறார்கள்! "பரதனை குகன் கூட சரியாகப் புரிந்துகொள்ளவில்லை சார்! இவன் தாயை வெறுத்து கோபமாக பேசிவிட்டு. மரவுரி தரிச்சி காட்டுக்கு வந்துகொண்டிருக்கிறான், அண்ணனைப் பார்ப்பதற்கு. அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு குகன் அவனுடன் சண்டை போடுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான். எப்படி இருக்கிறது பாருங்கள் நிலைமை.

இவர்கள் எல்லோரையும் விடுங்கள்! இராமன் லட்சுமணன் இவர்களாவது பரதனை சரியாகப் புரிந்து கொண்டார்களா? ஒரு வழியாக ஆற்றைக்கடந்து வரும் பரதனைப் பார்த்து விட்டு லட்சுமணன் கோபப்படுகிறான். வெகுண்டெழுகிறான்! இராமர் அவனை சாந்தப்படுத்தினார். சரி அதன்பின்பு பரதனை அருகிலே கூப்பிட்டு என்ன சொல்கிறார் தெரியுமா? "தம்பி. அரசாட்சி உனக்கு சுகம் தருகிறதா?"என்று கேட்கிறார். அவனைப் புரிந்து கொண்டிருந்தால் அப்படி கேப்பாரா? இப்படி பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய ஒரு குணச்சித்திரம் பரதன்!

இருந்தாலும் இராமனுக்கும் அவனுக்கும் வித்தியாசம் தெரியுமா? இராமன் தாயை மதிக்கத் தெரிந்தவன். தந்தை சொல்லை தட்டாதவன். "காட்டுக்குப் போக வேண்டும்" என்றதும் "ஏன்" "எதுக்கு" என்று கேட்காமல் புறப்பட்டு விடுகிறான். இந்த "குணம்" பரதனிடம் இல்லை! "அண்ணன் காட்டுக்குப் போய் விட்டான்" என்றதும் அம்மாவை கன்னா பின்னா என்று பேசிவிட்டு இவனும் புறப்பட்டு விடுகிறான். இதுதான் பரதன். சரி அவங்கள் தலையைத் தொங்கப் போட்டு மௌனமாக இருக்கிறார்கள். குகனுக்குக் கோபம் வருகிறது!

ஏன் இப்படி இருக்கிறீர்கள், என்று கேட்கிறான். அப்போது அவர் சொல்கிறார்கள் "தலைவா" பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரி தெரியவில்லையே! இவனும் நம் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக் கோலத்திலே அல்லவா வருகிறான். இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்? என்றான். யாராலேயும் புரிந்து கொள்ளமுடியாத பரதனை இப்படி ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டவர்கள்.

யார் இந்தப் பாமர மனிதர்கள்! வேடர்கள்!

விடயம் தெரிந்தவர்கள் எல்லாம் சரியாகப் புரிந்து கொள்ளவே முடியவில்லை! அது இந்த சாதாரண ஜனங்களாலே முடியும் பார்த்துக்கொள்ளுங்கள் என்று விபரம் சொன்னேன் என்னிடம் வந்து பேசிக்கொண்டிருந்தவர்கள்! அவர் இவ்வளவையும் கேட்டுவிட்டு, "இப்போது நீங்கள் தான் என்னை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை!" என்றார். என்ன சொல்றீர்கள்? என்றேன். "இவ்வளவு விபரமும் உங்களுக்கு எழுதி அனுப்பிய அந்த நேயரே நான் தான் சார். என்னிடமேயே கதை அளக்கறீர்களே!"என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு மாவட்ட, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவம் நேற்றையதினம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றது. (படங்கள்-தேவானந்தன்,சதீஸ்)

# முகமாலையில் விபத்து இருவர் படுகாயம்


(தருமபுரம்)

A9 பிரதான வீதியின் முகமாலைப்பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச்சென்ற இலங்கை போக்கு வரத்துச்சபை பேருந்தும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் பளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8-316)



கிளிநொச்சி முரசுமோட்டை அருள்மிகு கந்தக்கோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தினுடைய மகா கும்பாபிஷேகம் கடந்த 8 ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்-யதுபாஸ்கரன்)



வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவின் விசேட திருவிழாவான தேர்த் திருவிழா கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்- ஜோசப்நயன்)

# பணிப்புறக்கணிப்பில் வைத்தியர்கள் பொது மக்கள் அவதி!

(தருமபுரம்)

அரச கால்நடை வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக பொதுமக்கள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச கால்நடை வைத்தியர்களுக்காக தனியான பணியாப்பு உருவாக்கப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப் படுத்தவில்லை என குற்றம் சுமத்தியுள்ளதுடன், குறித்த யாப்பினை நடைமுறைப்படுத்த வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கால்நடை வைத்தியர்கள் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கிளிநொச்சி, வவுனியா அரச கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடை வைத்தியர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக தங்கள் கால்நடைகளிற்கான மருத்துவ தேவைக்காக வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (8-316)

# சட்டவிரோத மீன்பிடி வாழ்வாதாரம் பாதிப்பு!

## மீனவர்கள் கவலை

(முல்லைத்தீவு)

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் தாம் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான ஊடகச் சந்திப்பு ஒன்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இதில் முள்ளிவாய்க்கால் மீன்பிடித் தொழிலாளர் அமைப்பு மற்றும் கள்ளப்பாடு மீன்பிடி அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு கடற்தொழிலாளர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டனர். குறிப்பாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளான வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் உள்ளிட்ட மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாகவும், உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# 10 கிலோ கஞ்சா மீட்பு



(வவுனியா)

வவுனியாவில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ கஞ்சாவினை மீட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது வவுனியா, கதிரவேல் பூவரசங்குளம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 10 கிலோ கஞ்சாவினை கைப்பற்றியுள்ளதுடன், 45 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்து ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-250)



முல்லைத்தீவு கற்சிலைமடு பண்டார வன்னியன் கிராமத்தின் நிறைவாழ்வு அபிவிருத்தி மையத்தின் செயற்பட்டு மகிழ்வோம் வருடாந்தத் திறனாய்வு போட்டி அண்மையில் இடம்பெற்றது. (படம்-சதீஸ்)

# கிளிநொச்சியில் திடீர் சோதனை

## இளைஞன் கைது


(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக கடந்த 8 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் நள்ளிரவு 11.20 மணியளவில் சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது. சந்தேக நபரின் வீட்டு வளாகத்தில் கைவிடப்பட்ட சாக்கு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 31 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை கிளிநொச்சி நீதி மன்றத்தில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)

# கரையொதுங்கியது திமிங்கிலம்



யாழ்ப்பாணம் - புங்குடுதீவு கடலில் திமிங்கிலம் ஒன்று நேற்றையதினம் கரையொதுங்கியுள்ளது. ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு கடற்கரையில் காலை 11.45 மணியளவில் திமிங்கிலம் கரையொதுங்கியுள்ளது.15 அடி நீளமுள்ள குறித்த திமிங்கிலம் இறந்து கரையொதுங்கியது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 794





"அதைத் தெரிந்து கொள்ளத் தான் விரும்பினேன். இனி போகலாம்" என்று வந்தியத்தேவன் பின்னால் சென்றான். ஆனால் இப்போது ஆழ்வார்க்கடியான் பின் செல்வதற்கு அவ்வளவு அவசரப்படவில்லை, மேலும் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். பழுவூர் இளையராணி நந்தினியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். தற்செயலாகவோ, அல்லது அவனுடைய மனோ சக்தியினால் இழுக்கப்பட்டுத் தானோ என்னவோ நந்தினி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

ஆழ்வார்க்கடியானுடைய முகம் இருண்ட மரங்களின் மத்தியிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கூர்ந்து கவனித்தாள். அவள் முகத்தில் உடனே பீதியின் சாயல் பரவிற்று. இளையராணியின் முக மாறுதலைப் பெரிய பழுவேட்டரையர் கவனித்தார். அவள் பார்த்த திசையை அவரும் ஒரு தடவை கூர்ந்து நோக்கினார். இரண்டு உருவங்கள் நெருங்கி வளர்ந்திருந்த மரங்களின் இருண்ட நிழலில் மறைந்து கொண்டிருந்தன. உடனே சம்புவரையரின் காதோடு ஏதோ சொன்னார். சம்புவரையர் தம்முடைய வீரர்களில் இருவருக்கு ஏதோ கட்டளையிட்டார்.

பழுவேட்டரையரும் இளையராணியும் அமோகமான வாத்திய கோஷங்களுக்கிடையில் அரண்மனை வாசல் வழியாக உள்ளே பிரவேசித்தார்கள்.

அதே சமயத்தில் இரண்டு குதிரை வீரர்கள் அரண்மனை மதிலைச் சுற்றியிருந்த காட்டிற்குள் பிரவேசித்தார்கள். குதிரைகளைக் காட்டுக்குள் அவர்கள் கஷ்டத்துடன் செலுத்திக் கொண்டு போனார்கள். வெகு தூரம் சென்று யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கிட்டத்தட்டக் காட்டைக் கடந்து அப்புறத்தில் சமவெளியாக இருந்த திறந்த மைதானத்தண்டை வந்து விட்டார்கள்.

"அண்ணே! காட்டில் ஒருவரும் இல்லை. கிழவரின் மனப்பிராந்திதான்!" என்றான் அவர்களில் ஒருவன்.

அச்சமயம் நாய் ஒன்று அவர்களுக்கெதிரே ஊளையிட்டுக் கொண்டு வந்தது.

"தம்பி! நாய் எப்போது ஊளையிடும் தெரியுமா?" என்று மற்றவன் கேட்டான். "யாராவது செத்துப் போனால் உளையிடும்!" என்றான் முதலில் பேசியவன்.

"பேய், பிசாசு, வேதாளம் முதலியவைகளைக் கண்டாலும் ஊளையிடும்!" என்றான் இன்னொருவன். "உன்னைப் பார்த்துத்தான் பிசாசு என்று நினைத்துக் கொண்டுவிட்டதோ, என்னமோ?" "இல்லை, தம்பி! உன்னை வேதாளம் என்று எண்ணிக் கொண்டு விட்டது!"

இச்சமயத்தில் அவர்களுடைய தலைக்கு மேலே பயங்கரமான பேய்ச் சிரிப்பைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தார்கள். இரண்டு பேரின் தலைக்கு மேலேயும் இரண்டு மரக்கிளைகளில் இரண்டு வேதாளங்கள் உட்கார்ந்திருந்தன! இரண்டு வேதாளங்களும் அந்த இரண்டு வீரர்களின் கன்னத்திலும் பளீர் என்று அறைந்து, கழுத்தைப் பிடித்து நெட்டிக் கீழே தள்ளின! பிறகு, அந்தப் பொல்லாத வேதாளங்கள் குதிரைகளின் மீது ஏறிக் கொண்டு காட்டைக் கடந்து மைதானத்தில் விரைந்து சென்றன.

### 11 ஆம் அத்தியாயம் தோழனா? துரோகியா?

மணிமுத்தா நதி வெள்ளாற்றில் கலக்கும் வனப்பு வாய்ந்த இடத்தைத் தாண்டி ஆதித்த கரிகாலனும் அவனுடைய தோழர்களும் பரிவாரங்களும் வந்து கொண்டிருந்தார்கள். முதல் நாள் இரவு திருமுதுகுன்றத்தில் இளவரசருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றியும், அந்த க்ஷேத்திரத்தில் நடந்து கொண்டிருந்த ஆலயத் திருப்பணியைப் பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள்.


"திருமுதுகுன்றத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் செய்த காரியம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறு துளி



அந்தச் சிறுவன் யோசித்து சரி என்றான். அவர் ஒரு பெஞ்சும், இரண்டு புது குடங்களும், கொஞ்சம் டம்ளர்களும் கொடுத்தார். அது போக ஐந்து ரூபாய்க்கு எலுமிச்சம் பழங்களையும் கொடுத்தார். இப்பொழுது ஒரு குடத்தில் உப்பு கலந்தும், மற்றொன்றில் சர்க்கரை கலந்தும் வைத்தான். அன்றும் ஏழை மக்கள் அவனுக்கு சில்லறைகளை நிறைய போட்டிருந்தனர்.

அவன் அதை எடுத்துக் கொண்டு பழக்கடைக்காரருக்கு, எலுமிச்சை பழத்துக்குண்டான தொகையையும், குடம், பெஞ்சுக்குண்டான வாடகையையும் கொடுத்தான். அது போக கையில் பத்து ரூபாய்க்கு மேல் இருந்தது.

அவன் அம்மாவிடம் சொல்லி விட்டான். இனி பிச்சை எடுப்பது கூடாது. இது நமக்கு பிழைப்பதற்கு ஒரு வழி. அதனால், இதனையே செய்யலாம்.

நாளடைவில் நல்ல வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தான் அந்தச் சிறுவன். இப்பொழுது இவனே புதிய குடங்களும், மற்றைய பொருட்களும் வாங்கி விட்டான்.

ஒன்றே ஒன்று மட்டும் உறுதி எடுத்துக் கொண்டான். ஏழைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதால், அவர்களிடம் அதிக தொகை கேட்கவில்லை. அதனால் அதிகமான வாடிக்கையாளர்கள் அவனது இடத்துக்கு வரத் தொடங்கினர்.

அவனும் தன் தாயுடன் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து தங்கி கொண்டான்.

காலங்கள் உருண்டன. அன்று பார்த்த அந்த சிறுவன் இப்பொழுது நகரில் நான்கைந்து பழக்கடைகளுக்கு சொந்தக்காரன். நகரில் அவனுக்கும், அவன் அம்மாவுக்கும் சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொண்டான்.

என்றாலும் இந்த கடை எப்பொழுதும் போல் ஏழைகளுக்காகவே இப்பொழுதும் சேவையாக செய்து கொண்டிருக்கிறான். அவனும் இளைஞனாய் ஆகியிருந்தான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு ஒப்பானது.

*– பாரதி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசாங்கம் ரெடி தமிழர் தரப்பு ரெடியா?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் இந்த மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

26ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் உட்படத் தமிழ்த் தரப்புகள் மற்றும் காணாமல்போனவர்களின் உறவுகள், சிவில் அமைப்புகளைச் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் வகையில்; இலங்கைக்கு எதிராக வெளியக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தீர்மானத்தை மேற்படி மீளாய்வுக் கூட்டத்தில் பிரித்தானியா கொண்டு வரவுள்ளதான தகவல்கள் ஏலவே வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கான விஜயமொன்றை எதிர்வரும் 23ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார்.

ஆம், இலங்கைக்கு வருகை தரவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் முன்வைக்கின்ற அறிக்கையானது; இலங்கை தொடர்பான தீர்மானத்தில் காத்திரமான வகிபங்கை ஆற்றவுள்ளது.

இதன் காரணமாக இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருடனான சந்திப்பின்போது, இறுதிப்போரில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்பதை வலியுறுத்தவுள்ளதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக முன்னர் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்பதையும் ஆணித்தரமாகக் கூறவுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

அதாவது இலங்கைக்கு வருகின்ற மனித உரிமைகள் ஆணையாளர், தமிழ்த் தரப்புக்களைச் சந்திக்கின்ற போது எமது முன்மொழிவுகள் எவ்வாறாக இருக்கப் போகின்றது என்பதுதான் நம் கேள்வி.

ஆம், கடந்த காலங்களில் நாங்கள் பயன்படுத்தத் தவறிய சந்தர்ப்பங்கள் பல. அவ்வாறு சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியதால், நாம் இழந்தவையும் ஏராளம்.

ஆக, இனியேனும் அந்தத் தவறை நாம் செய்துவிடலாகாது. எனவே எமக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் எம்மைச் சந்திக்கும்போது, ஒரே கருத்தை – ஒரே நிலைப்பாட்டை ஒட்டுமொத்த தமிழ்த் தரப்பாக நின்று அவரிடம் நாம் முன்வைப்பது மிக மிக அவசியம்.

காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் எங்களை நாங்கள் தயார்படுத்த வேண்டும். இது விடயத்தில் தமிழ் சிவில் சமூகங்கள் மௌனம் சாதிக்காமல் – ஆணையாளர் வந்து போன பின்பு கடிதம் அனுப்பாமல், நேரில் சந்திக்கும்போது எங்களின் அவலத்தை – எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட கொடுமைகளை சான்றாதாரங்களுடன் எடுத்துக் கூற வேண்டும்.

ஆம், அரசாங்கம் ரெடியாகிவிட்டது. நாங்கள் பேசாதிருந்தால் அது பெரும் பிழையாகி விடும்.

## பாடசாலைகளில் நடைபெறும் பிரச்சினைகளை மூடி மறைக்கக்கூடாது

### வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் நடைபெறும் பிரச்சினைகளை மூடி மறைக்கக் கூடாது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் நடைபெறுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. அவற்றை மூடிமறைக்கும் வகையில் பாடசாலைகள் செயற்படக்கூடாது. கடந்த காலங்களில் மாவட்டச் செயலராக தான் பணியாற்றிய போது அவ்வாறான முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது பாடசாலை சமூகங்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியிருந்தது எனவும் தெரிவித்தார்.

மேலும் எந்தவொரு விடயமும் பாதிப்பு ஏற்பட முன்னரே, வரும் முன் காப்போம் என்ற அடிப்படையில் தடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், அதற்கு சிறுவர்களுடன் தொடர்புடைய சகல அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் கிராம மட்டத்தில் விழிப்புணர்வு குழுக்கள் சிறப்பாகச் செயற்பட்டன என்றும் இப்போது அவை அருகிவரும் நிலையில் அவற்றை மீளவும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வர வேண்டியது அவசியம் என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். (ம-4,7)

## அளவெட்டி தெற்கு கமக்காரர் அமைப்பின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு கமக்காரர் அமைப்பின் பொதுக்கூட்டமானது நாளை புதன்கிழமை (11) பிற்பகல் 2.00 மணியளவில் பெருமாக்கடவை பிள்ளையார் கோவில் மண்டபதில் இடம்பெறவுள்ளது.

அளவெட்டி தெற்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் சின்னப்பு தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் அளவெட்டி தெற்கு கிராம உத்தியோகத்தர் அஜந்தன்,அளவெட்டி தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் லோகேஸ்வரன், கீரிமலை கமநல சேவைகள் நிலையத்தின் அபிவிருத்தி முதன்மை உத்தியோகத்தர் முரளிதரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-4,7)

## பண்டத்தரிப்பில் வீடு புகுந்து ஆவணம், பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு காளையடி தெற்குப்பகுதியில் நேற்று பட்டப் பகலில் வீடு புகுந்து 17 ஆயிரம் ரூபா பணமும் முக்கிய ஆவணங்களும் களவாடப்பட்டுள்ளன.

தனிமையிலிருந்த ஓய்வூதியர் ஒருவரது வீட்டிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து இளவாளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவ் வீட்டில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் அது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் விசனம் தெரிவித்தனர். (ம-7,4)

## சிறைத் தண்டனைக்கு எதிராக மகிந்தானந்த மேன்முறையீடு

(கொழும்பு)

உயர் நீதிமன்றம் தனக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தமைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, சதொச ஊடாக 14,000 கரம் போர்ட்களையும் 11 ஆயிரம் டாம் போர்ட்களையும் கொள்வனவு செய்ததன் மூலம் 53 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இதையடுத்து முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணையில் மகிந்தானந்த அலுத்கமகேவுக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் அநுராதபுரத்தில் பெண் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் எப்பாவல பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எப்பாவல பொலிஸார் தெரிவித்தனர்.

எப்பாவல பொலிஸ் பிரிவின் றொட்டவெவ காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் (8) பிற்பகல் வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

எப்பாவல, றொட்டவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட, 55 வயதுடைய, ஒரு பிள்ளையின் தாயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் நேற்று முன்தினம் றொட்டவெவ காட்டுப் பகுதிக்கு கறிவேப்பிலை பறிப்பதற்காக சென்றிருந்த போது கட்டுத்துவக்கு வெடிப்பில் சிக்கி காயமடைந்த நிலையில் எப்பாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் எப்பாவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காக எப்பாவல பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-4,7)

## பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமனம்

பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் நிஷான் தனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி, கடந்த விசாக பூரணை தினத்தின் போது சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனியவை பதவி இடைநீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று (9) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாக நிஷான் தனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (ம-4,7)

## அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு விளக்கமறியல்

(அநுராதபுரம்)

கைது செய்யப்பட்ட அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையின் கைதி ஒருவரை சட்டவிரோதமாக விடுவித்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உப்பு உற்பத்தியும் அதன் இன்றைய நிலைமையும்

உலகில் பல வகையான உப்புக்கள் உள்ளன. அதில் பொதுவாக உப்பு என்றால் சோடியம் குளோறைட் (Nacl) என்ற கறி உப்பைத் தான் குறிக்கிறது. இந்த உப்பு கடல் நீரைச் சூரியசக்தியினால் ஆவியாக்கல் மூலம் உப்பளங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. உப்பளங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடம், கடற்கரையை அண்மித்த பகுதியாகவும், களிப்பாங்கான நிலங்களாகவும் மழை வீழ்ச்சி குறைந்த பிரதேசங்களாகவும், அதிக காற்று வீசக்கூடியதும், குறைந்த வளிமண்டல ஈரப்பதன் உள்ளதுமான வெளி கொண்ட பரந்த இடமாகவும் அமைதல் வேண்டும். இலங்கை மேற்குறிப்பிட்ட இயற்கை வளங்கள் நிறைந்து காணப்படும் ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் நாடு. அந்த வகையில் உப்பு உற்பத்திக்கு பொருத்தமான நாட்டின் கரையோர பகுதிகளான ஆனையிறவு, மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் உப்பளங்கள் அமைந்துள்ளன.

விஞ்ஞான வளர்ச்சி அடைவதற்கு முன்பு ஆரம்பகாலங்களில் கடல் நீர் பெருக்கெடுக்கும் பொழுது, இவ் உவர் நீர் கடற்கரையை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள தாழ்நிலப் பகுதிகளுக்கு உட்சென்று தங்கிக்கொள்கிறது.

இது சூரிய வெப்பத்தின் காரணமாக ஆவியாகி வெண்ணிற உப்பு பளிங்குகளாக படிவடைகிறது. இதை மக்கள் சேகரித்து உணவுத் தேவைக்காக பாவித்தார்கள் இந்த உப்புடன் கடல் நீரில் உள்ள வேறு சில உப்புகள் கலந்து இருப்பதால், இது ஒரு சுகாதார தரம் அற்ற உணவிற்கு பொருத்தமில்லாத உப்பாகும். இந்த உப்பை தன்படுவான் உப்பு Self Crystallization என்று அழைக் கப்படுகிறது.

இவ்வகையின் தூய்மையான உப்பு உற்பத்தி விஞ்ஞான முறைப்படி 1920 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது. அன்றிலிருந்து உப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவந்த உப்பளங்கள் துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்காக 1966 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ளசகல உப்பளங்களும் தேசிய உப்புக்கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் காரணமாக இலங்கை உப்பு உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் கண்டு நாட்டுக்கு தேவையான உப்பை உற்பத்தி செய்து நாடு தன்னிறைவு கொண்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் வடக்கில் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, கல்லுண்டாய் செம்மணியிலும் கிழக்கில் நிலாவெளி, குச்சவெளி, கும்புறுப்பிட்டியிலும் மேற்கில் புத்தளம், பாலாவி, கல்பிட்டி, கரத்தீவு, நாச்சிக்களியிலும் தெற்கில் அம்பாந்தோட்டை, கோளங்கல, பூந்தலை, பளட்டுப்பானையிலும் நல்ல தரமானதும் நாட்டுக்குத் தேவையான உப்புத்தொகையை உற்பத்தி செய்து நாட்டிற்கு நல்ல பொருளாதாரத்தையும் ஈட்டித் தந்தது. இதன் உச்சக்கட்டமாக 1980 ஆம் ஆண்டு 180,000 தொன் உப்பை உற்பத்தி செய்தது. வட பிராந்தியம் 80,000 தொன், மேற்கு பிராந்தியம் 62,000 தொன், தெற்கு பிராந்தியம் 38,000 தொன் உப்பையும் உற்பத்தி செய்தன.


### 1980ஆம் ஆண்டு உப்பு உற்பத்தியும் ஏற்றுமதியும்


இந்த காலகட்டத்தில் நாட்டின் சனத்தொகை (1980) -15 மில்லியன்.ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு தேவையான உப்பு-5-6 kg,எனவே ஒருவருடத்திற்கு உணவிற்காக நாட்டுக்கு தேவையான உப்பு-90,000MT

பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்

கொஸ்டிக்சோடா (NaoH), குளோரீன் ($Cl_2$) உற்பத்திசெய்வதற்கு மூலப் பொருளாக (ஒரு வருடம்) -8,000 MT, பிற கைத்தொழில் தேவைக்காக -22,000 MT, வருடாந்த மொத்த தேவையான உப்பு - 120,000 MT, வருட உப்பு உற்பத்தி-180,000 MT, மீதம் -60,000 MT

இவ்வாறு 1977 ஆண்டிலிருந்து






மீதமாக உள்ள உப்பை வட பிராந்திய உப்பளங்களில் இருந்து காங்கேசன்துறை (KKS) துறை முகத்தினூடாக மாலைதீவு, மொம்பாசா, பங்களாதேஷ், உகண்டா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக அன்னிய செலாவணியை நாட்டிற்கு சம்பாதித்துக் கொடுத்தது.

இவ்வாறு வாலாற்றுப் பின்னணி கொண்ட நாடு, கடந்த இரண்டு வருடங்களாக சீரற்ற கால நிலையால் உப்பு உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டு 2025 தை மாதத்திலிருந்து இந்தியாவில் இருந்து உப்பை இறக்குமதி செய்து நாட்டு மக்களுக்கு அதிக விலையில் விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


2024 ஆம் ஆண்டு நாட்டின் உப்பு உற்பத்தி -120,000 MT, ஆண்டிற்கான நாட்டுக்கு தேவையான உப்பு -180,000 MT, பற்றாக் குறை- 60,000 MT, சோடியம் குளோரைட் (NaCl), மக்னீசியம் குளோரைட் ($MgCl_2$),மக்னீசிய சல்பேற்று ($MgSo_4$)

இலங்கையில் உள்ள உப்பளங்களில் தூய்மையான கறி உப்பைத் தயாரிப்பதற்கு, விஞ்ஞான முறைப்படி முறைகளில் விகிதாரப்படி நீர்த்தாங்கிகள் (Reservoir), செறி வாக்கல் தேக்கங்கள் (Conden ser), செறிவு உவர் நீர் தொட்டிகள் (Forebasin), பளிங்காக்கல் பாத்திகள் (Crystalillizer) என்பவற்றை அமைத்து கடல் நீரை சூரிய சக்தி மூலம் ஆவியாக்கி பகுதிபடப் பளிங்காக்கள் (Fractional Crystallization) இந்த முறையில் தயாரிக்கும் கறி உப்பில் வேறு உப்புகள் எல்லாம் பிரித்து அகற்றப்பட்டு 97-98% NaCl2 செறிவுள்ள தூய உப்பு தயாரிக்கப்படுகிறது. மேலும் இந்த உப்பை அரைத்து கழுவி உலர்த்தி அயடீன் சேர்த்து சிறிய கல் உப்பாகவும், மேசை உப்பாகவும் விநியோகப்படுகிறது.

### 2024 ஆம் ஆண்டு உற்பத்தியும் பற்றாக்குறையும்

வருடத்திற்கு தேவையான உப்பு தொகை.

1. இலங்கை சனத்தொகை -22 மில்லியன், ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு தேவைப்படும் உப்பு-5-6 kg, உணவிற்காக முழு நாட்டிற்கும் தேவைப்படும் உப்பு-22மில்லியன் (22, 000, 000x6kg) - 132,000 MT, கைத்தொழிலுக்காகவும் பிற தேவைக்காகவும், வருட தேவை-48,000 MT, மொத்த தேவை - 180,000 MT, வருட (2024) உப்பு உற்பத்தி -130,000MT, மேலதிக தேவை -50,000 MT



பா.ஏகாம்பரம்
(Consultant-salt-Industry)

**தை மாதம்**

2025 இறக்குமதி செய்த தொகை -25,000 MT, மேலும் இதுவரை உப்பு இறக்குமதி தொடர்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக(2023, 2024, 2025) நிலவிய அதிக மழையுடன் கூடிய சாதகமற்ற காலநிலை காரணமாக புத்தளம், ஆனையிறவு போன்ற சிறுகடலில் உப்பு செறிவு குறைந்து காணப்பட்டது.

உப்பளங்களில் பல படி முறைகளில் தேக்கிவைத்த உப்பு நீரின் அடர்த்தி வீழ்ச்சி அடைந்தது உப்பு பாத்திகளில் விழைந்த உப்புக்கள் அறுவடைக்கு முன்பாக முற்றிலும் கரைந்து பேரழிவை சந்தித்தது.

இதன் காரணமாக வருடாந்த உப்பு உற்பத்தி 47% ஆக வீழ்ச்சி அடைந்தது. இந்த காலத்தின் தாக்கம் இலங்கையில் உள்ள எல்லா உப்பளங்களின் உற்பத்தியை அதிகம் பாதித்தது இதன் காரணமாக 2025 ஆம் வருட தொடக்கத்தில் இருந்து உப்பு இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதன் பாதிப்பு இவ்வருடமும் தொடர்கிறது. இப்பொழுது ஜூன் மாதம் ஆரம்பித்துவிட்டது இது வரை எந்த உப்பளத்திலும் உப்பு செய்கை இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை, காரணம் தொடர் மழைவீழ்ச்சி மொத்தம் - 634 mm. தை 175mm, மாசி-81mm, பங்குனி-113mm, சித்திரை-141 mm, வைகாசி 124 mm ஏற்பட்டுள்ளது. உப்பு உற்பத்தி செய்வதற்கு குறைந்தது 80 நாட்கள் தொடர்ச்சியாக வறண்ட (மழையற்ற) காலநிலை நிலவ வேண்டும்.

இவ்வாறு சாதகமற்ற கால நிலை மேலும் தொடருமானால் இனிவரும் காலங்களில் கடல் நீரைப் பயன்படுத்தி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரசாதனம் மூலமே நாட்டுக்குத் தேவையான உப்பை உற்பத்தி செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டியை...

வயதுடைய எம்.மொஹமட் கியாஸ், அவரது மனைவியான 34 வயதுடைய எம்.பாத்திமா ஃபர்ஹானா ஆகியோரும் அவர்களது மூன்று பிள்ளைகளுமே தமிழ்நாட்டில் பொருளாதாரத் தஞ்சம் கோரியுள்ளனர்.

படகு மூலமாக இலங்கையிலிருந்து பயணித்த இவர்கள், நேற்று அதிகாலை இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடிக்கு இடையேயான கரையில் கரை ஒதுங்கியுள்ளனர்.

மோசமான பொருளாதார நிலைமை காரணமாக தாங்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக, குறித்த குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (ம-7,4)

## பணி நீக்கம்...

னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி, கடந்த விசாக பூரணை தினத்தின்போது, சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான நிலையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,4)

## மேயராக...

கைத் தமிழரசுக் கட்சி பரிந்துரைத்துள்ளது.

அதேவேளை, யாழ். மாநகர சபையின் துணைமேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.நல்லூரில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனின் இல்லத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைக்கான மேயர், துணை மேயர் தெரிவுகள் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4,33)

## மன்னாரில்...

களுடன் நான்கு சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களடமிருந்து சவர்க்காரம், கஜூ உள்ளிட்ட பொருட்களுடன் இரு டிங்கி படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதான நால்வரும் கல்பிட்டியைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் நால்வரையும் மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைக்காக கடற்படையினர் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,4)

## வாழ்வாதார...

வித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அண்மையில் தமிழகத்தில் உள்ள அகதி முகாமில் இருந்து நாடு திரும்பிய 75 வயதுடைய நபர் ஒருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்தியத் தூதுவரிடம் சுமந்திரன் எடுத்துரைத்தார்.

அதுமாத்திரமன்றி இந்திய அகதி முகாம்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விண்ணப்பித்திருப்பது பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனைச் செவிமடுத்த இந்தியத் தூதுவர், மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கு அவசியமான இருப்பிடம் மற்றும் வாழ்வாதார உதவிகளை இலங்கை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் எனவும், இதுபற்றி அரசுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரிவித்தார். (ம-7,4)

## திஸ்ஸ விகா...

வலியுறுத்தி தையிட்டியில் நேற்றுப் போராட்டம் நடைபெற்றது.

குறித்த போராட்டம் இன்றைய தினமும் நடைபெறவுள்ளது. திஸ்ஸ விகாரையில் இன்று நடைபெறவுள்ள பொசன் பௌர்ணமி வழிபாட்டு நட

வடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்நிலையில் தையிட்டி விகாரைப் பகுதியில் குழப்பமான சூழல் உருவாகலாம் என்ற முன்னெச்சரிக்கையின் அடிப்படையில் பொலிஸாரின் நீரத்தாரை வாகனம் நேற்றுக் கொண்டு வரப்பட்டதுடன் கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். (ம-7,4,33)

## தையிட்டியில்...

வான் நீதிமன்றத்தினால் நேற்று (09) தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## சிஐடி...

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, தரமற்ற தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் ஆஜராகவுள்ளார். (ம-7,4)

## வர்த்...

மான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகள் 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசாங்கத்தின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அவ்வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக இரத்துச்செய்ய வேண்டும் எனக் கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அவ்வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதனை இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்

யிடப்படவில்லை.

அதேபோன்று பிரதமருக்கும் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால் காந்தவினால் வாக் குறுதியளிக்கப்பட்டவாறு கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அமர் வின்போது இவ்விவகாரம் பற்றி எந்த வொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் இவ்வர்த்தமானி அறிவித்தல் எப்போது இரத்துச் செய்யப்படும் என குறித்த திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந்தகவல் ஊடாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம்தான் கோரியிருப்பதாகவும், இது பற்றி திங்கட்கிழமை (9) பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் பேசவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த சனிக்கிழமை (7) தெரிவித்திருந்தார். (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 5855
Y 6 7 4 5 1 5
அத சம்பத
Y 4 5 1 5
சீட்டிழுப்பு இலக்கம் 0430
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1885
I 12 21 29 51 I
68709

மெகா பவர்
திகதி 09/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2203
H 26 22 23 47 76

ஜய
திகதி 2025.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 0123
J 5 0 6 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4097
சீட்டிழுப்பு திகதி 09.06.2025
N 09 19 23 42
N

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 1164
கன்னி 02 20 51 55 கன்னி
74780 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.06.2025 563
L 0 8 1 3 5 3
99289
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,871,948.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2829
சீட்டிழுப்பு திகதி 2025.06.09 தினம் திங்கட்கிழமை
34 38 62 76 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,278,467.20
DLB

சனிதா
திகதி 09.06.2025 வெற்றி வாரம் 4990
13 38 43 49 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,736,110.80
68191
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.06.09 வெற்றி வாரம் 2133
25 27 45 66 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,767,079.60
DLB

சீட்டிழுப்பு வாரம் 4541
சீட்டிழுப்பு திகதி 09.06.2025 தினம் திங்கட்கிழமை
21 38 51 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,469,272.80
190225
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 19 07 22 41 62
2005
09.06.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,618,895.60
DLB

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2655
சீட்டிழுப்பு திகதி : 2025.06.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,507,068.80
ADA KOTIPATHI
07 09 14 22 B
571976
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அகவைதின வாழ்த்து



இணுவையூர் குமர நர்த்தனாலயத்தின் குருவான

நாட்டியக்கலைமணி

**திரு. நடராசா குமரவேள்**

அவர்களின் பொன் அகவை தினத்திலே கலையில் சிறந்து விளங்க வாழ்த்தி நிற்கின்றோம்.

நீண்ட ஆயுளோடும் நல்ல சுகத்தோடும்
இறைவன் அருளோடும்.
நூறாண்டு காலம் நீடூழி வாழ
மனதார வாழ்த்துகிறோம்
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
வாழ்க வளமுடன்

Happy Birthday

வாழ்த்துவோர்

இணுவையூர் குமர நர்த்தனாலயத்தின்
"பாம்பா தோட்ட வீதி" இணுவில் மேற்கு, இணுவில். பழைய மாணவர்கள், கல்வி பயிலும் மாணவர்கள்

(C-3377)

# பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்பவர், சமையல் உதவியாளர், கொத்து றொட்டி தயாரிப்பவர், பிறைட்றைஸ் தயாரித்தல் போன்ற பணி நிலைகளுக்குரியவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு : **077 649 1027**

(1216)

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

o UK 11Kg - 1420/- o France 11Kg - 2220/- o Germany 11Kg - 2020/-
o Swiss 11Kg - 2510/- o Australia 11Kg - 1980/- o Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237

(C-3176)

## பணியாளர் தேவை

விடத்தல்பளை, கச்சாய் வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அக்ரோ நிறுவனத்தில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பண்ணையில் வேலை செய்த அனுபவமுள்ள பணியாளர் தேவை.

**077 076 7114**

(C-3173)

உச்சிப் பிள்ளையார் துணை

# தென்னிந்திய யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 18.06.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** உச்சிப்பிள்ளையார் மணக்குள விநாயகர், பிள்ளையார்பட்டி விநாயகர், நவக்கிரக கோயில்கள், சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன், வியாழன், செவ்வாய், ராகு, கேது, சனீஸ்வரன், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம், சமயபுரம், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, ஸ்ரீரங்கம், சாரங்கபாணி, ஆதி கும்பேஸ்வரர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல், திருக்கானஸ்திரி, ஏகாம்பரேஸ்வரர், சீர்காழி, வடபழனி முருகன், பஞ்சவடி ஆஞ்சநேயர், கபாலீஸ்வரர், மேல்மருவத்தூர், (மரீனா பீச்) 45 ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

# வட இந்திய யாத்திரை

பத்திரிநாத் தோரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்

**தரிசிக்கும் இடங்கள் :** ஹரித்துவார், ரிசிகேஷ், கங்கோத்திரி, யமுனோத்திரி, உத்திரகாசி, ஸ்ரீரிநாத், கேதாரநாத், சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், இந்திய – சீனா எல்லை

நாட்கள் : 12 ஆரம்பம் : 10.07.2025

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

(1215)

# வட இந்திய யாத்திரை

காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை

நாட்கள் : 10 ஆரம்பம் : 10.08.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** இராமர் கோயில், திருவேணி சங்கமம், காலபைரவர், கங்கா பூஜை, காசியில் 3 நாட்கள், சீரடி பாபா, சனி சிங்னாப்பூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, உத்திரகோசமங்கை, திருப்புராணி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை.

**ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்**

59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11

**077 768 0102, 077 736 2154**

## பணியாளர் பதவி வெற்றிடம்

எமது அலுவலகத்திற்கு Cleaning Staff (tea maker) உடன் தேவை. (பெண்கள்)

அடிப்படைச் சம்பளம் EPF, ETF நிரந்தர வேலை.

**076 231 8693**
**074 212 7723**

(4510)


## யாழில்...

தரப்படும் எனத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் பொதுச் செயலாளரும் ஒரே நிலைப்பாடாக உறுதியாக ரெலோ பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

அந்தந்தச் சபைகளில் அதிக இடங்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதற்கு உதவும் முன்னைய பகிரங்க அறிவிப்பை ரெலோவும், அது சார்ந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் பின்பற்றுமானால் அதே முறைமையைத் தமிழரசும் தவறாது பின்பற்றும்.

அந்த முறைமைக்கு மாறான போக்கை ரெலோ உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பின்பற்றுமானால், அதே போல் மாறான முறையைத் தமிழரசுக் கட்சி வன்னியில் பின்பற்றும் என்று தமிழரசின் இரு தலைவர்களும் உறுதிபடத் தெரிவித்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-4,7,250)


## புதிய மாடித் தொகுதி வாடகைக்கு

யாழ்ப்பாணம் K.K.S வீதியை முகப்பாகக் கொண்டு மருதனார்மடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முதலாம் இரண்டாம் மாடியில் (first and second Floor) அமைந்துள்ள அறைத் தொகுதிகள் மொத்தமாக வாடகைக்கு கொடுக்கப்படும்.

இரண்டு மாடிகளும் நவீன வசதிகளுடன் கூடிய Rooms with attach bathroom, Hall, Kitchen கொண்டவை.

வாகனத் தரிப்பிட வசதி உள்ளது.

Hotel, Guest house நடாத்த உகந்த இடம்.



(4511)

தொடர்பு: **076 124 1537, 077 017 9041, 077 116 3338**

# மணிவிழா வாழ்த்து



10.06.2025 இன்று மணிவிழாக் காணும் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு.ஆசைப்பிள்ளை நோபேட் உதயகுமார்**

(BA,PGDE, M.Ed.(Hons), SLPS-I, J.P)

Best Wishes!

அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக 37 ஆண்டுகள் அளப்பெரும் கல்விப் பணியாற்றி மணிவிழாக் காண்கிறார். அவர் தனது ஓய்வு காலத்தில் இறைவன் அருளுடன் நீண்டகாலம் சகல வளங்களும் பெற்று வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

### சேவை விபரம்

- 21.09.1988–13.11.1988 சேவை முன் பயிற்சி
- 14.11.1988–06.02.1991 – யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை – ஆசிரியர்
- 07.02.1991–31.12.1992 – பலாலி ஆசிரியர் கல்லூரி – ஆசிரியர் பயிற்சி
- 01.01.1993–20.07.1993 – யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை – ஆசிரியர்
- 21.07.1993–03.01.1995 – யா/நாவற்குழி மகா வித்தியாலயம் – ஆசிரியர்
- 04.01.1995–26.05.1996 – யா/நவாலி மகா வித்தியாலயம் – ஆசிரியர்
- 27.05.1996–22.02.1998 – யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி – ஆசிரியர்
- 23.02.1998–25.04.1999 – யா/மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம் – ஆசிரியர்
- 26.04.1999–31.12.2012 – யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை – அதிபர்
- 01.01.2013–22.09.2015 – யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் – அதிபர்
- 23.09.2015–09.06.2025 – கோட்டக்கல்விப் பணிப்பாளர் (சங்கானை) 10 வருடங்கள்

வாழ்த்துவோர் : **அதிபர் சங்கம்**
**சங்கானைக் கல்விக் கோட்டம்.**

(C-3168)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org